**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 839/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கலைவாணி** | Caste | : |
| Father 's Name | : **பாலமுருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியம் எதிரி முன்பு பதிவு செய்யப்படுகிறது)**
**02.06.2025**
**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவரின் நண்பர் ஆவார். கடந்த 13.07.2021 அன்று இரவு 8.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி எனது கணவரை தேடி வந்தார். எனது கணவர் வெளியே செல்வதை பார்த்துவிட்டு ஆஜர் எதிரி என்னை பார்த்து என்னை அசிங்கமாக திட்டி கையால் என்னை அடித்து நான் போட்டுஇருந்த தாலிக்கயிறால் என் கழுத்தை நெறித்தார். எனது முகத்தினை கீறிவிட்டார். நான் தள்ளிவிட்டதில் அவர் கீழே விழுந்துவிட்டார். நான் வெளியே சென்று அக்கம் பக்கம் உள்ளவர்களை கூப்பிட்டிருந்தேன். சம்பவத்தின் போது ஆஜர் எதிரி போதையில்இருந்தார். எனது கணவர் வந்தவுடன் சம்பவம் பற்றி நான் கூறினேன். எனது உடன்பணிபுரிந்த ஸ்ரீதர் மற்றும் நான் மற்றும் எனது பெற்றோர்களுடன் எனது கணவரும் சேர்ந்து காவல் நிலையத்தில் சம்பவம் பற்றி நான்புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடைய கையெழுத்து தான். மேற்படி

புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 839/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாலமுருகன்** | Caste | : |
| Father 's Name | : **ராமசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியம் எதிரி முன்பு பதிவு செய்யப்படுகிறது)**
**02.06.2025**
**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பேருந்தில் நடத்துனராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி எனது நண்பர் ஆவார். கடந்த 13.07.2021 அன்று இரவு 7.30 மணியளவில் ஆஜர் எதிரியிடம் எனது இருசக்கர வாகனத்தை கொடுத்துவிட்டேன். அதை திரும்ப கொடுக்கவந்தபோது ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு வந்தார். நான் சத்தம் போட்டு அனுப்பிவிட்டேன். நான்வெளியே சென்றுவிட்டேன். அதன் பின்பு ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் தவறாக பேசி எனது மனைவியின் கழுத்தை நெறித்துள்ளார். மேற்கண்ட தகவலை எனது மனைவி வீட்டிற்கு வந்தவுடன் கூறினார். எனவே நாங்கள் எதிரியுடன் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி எனது மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை**